# ‘மெட்ரோ’வில் இனி விடுமுறையில் பாதி கட்டணம்

சென்னை, அக். 25–

மெட்ரோ ரயிலில், ஞாயிறு மற்றும் பொது விடுமுறை நாட்களில், 50 சதவீத கட்டண சலுகையில், பயணம் செய்யலாம் என, மெட்ரோ நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சென்னை, விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது. இந்த ரயிலில், பயணியர் போக்குவரத்தை அதிகரிக்க, நிர்வாகம் சார்பில், பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதையடுத்து, ஞாயிறு மற்றும் பொது விடுமுறை நாட்களில், 50 சதவீத கட்டண சலுகையில், பயணம் செய்யலாம் என, பயணியருக்கு மெட்ரோ நிர்வாகம் சலுகை அளித்துள்ளது. தீபாவளி நாளான, 27ம் தேதியில் இருந்து, இச்சலுகை அமலுக்கு வருகிறது.

சலுகை கட்டணத்தில், தீபாவளி மற்றும் அரசு விடுமுறை அளித்துள்ள, 28ம் தேதி திங்கள்கிழமை மற்றும் கிறிஸ்துமஸ் தினமான, டிச., 25ம் தேதி புதன்கிழமையும், 50 சதவீத கட்டண சலுகையில் பயணம் செய்யலாம்.

இரண்டு நிலையங்களுக்கு இடையேயான பயணத்துக்கு, 20 சதவீத கட்டண சலுகையுடன் வழங்கப்பட்டுள்ள, ‘டிரிப் பாஸ்’ மற்றும் மாதம், 2,500 கட்டணத்தில் வழங்கப்பட்டுள்ள, ‘அன்லிமிட்டெட் பாஸ்’ ஆகியவற்றை பயன்படுத்தி பயணம் செய்வோருக்கு, இந்த கட்டண சலுகை பொருந்தாது என, மெட்ரோ நிர்வாகம் தெரிவித்துள்ளது.